**தலைப்பு 135 – பெருந்தோட்ட அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பெருந்தோட்ட அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பெருந்தோட்ட அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 ஆகஸ்ட் 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 செப்டம்பர் 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெருந்தோட்ட அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1(அ) மற்றும் 1.6.2(ஆ) இல் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் குகறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டின் போதும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

**(அ) வருமான பெறுவனவு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 20.02.01.04 ஆம் இலக்க குத்தகை வாடகை வருமானம் விடயத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம் திறைசேரி வருமான பொழிப்பு அறிக்கையின் பிரகாரம் (SA-20) ரூபா 951,725,623 ஆம் இருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதி செயலாற்றல் கூற்றில் அது ரூபா 951,307,842 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிராகாரம் வேறுபாடான ரூபா 417,781 தொகை குத்தகை வாடகை அல்லாத வருமான பொறுப்பாக இருந்தமை இனங்காணப்பட்ட போதும், அது சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. | 20.02.01.04 என்ற குத்தகை வாடகை வருமான தலைப்பில் சேகரிக்கப்பட்ட வருமானம் திறைசேரி வருமான பொழிப்பு அறிக்கைக்கும் நிதிச் செயலாற்றல் கூற்றில் வரியல்லா வருமானத்திற்கும் இடையே வேறுபாடு ரூபா 417,781 தொகை ஏற்பட்டிருந்தமை இனங்காணப்பட்டடிருந்தது. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிராகரம் பெறுவனவுகள் சரியாக பதியப்பட வேண்டும். |

**(ஆ) வருமானம் அல்லாத பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கிற்கு உரியதாக மீளாய்வாண்டின் இறுதியில் திறைசேரி புத்தகங்களுக்கும் அமைச்சின் புத்தகங்களுக்கும் இடையே காணப்பட்ட ரூபா 56,769 தொகையான வேறுபாடு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | அரச நிதி திணைக்களத்தின் 2021.05.21 ஆம் திகதி வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் கணக்கீட்டு வழுக்களை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும். |

**1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு முதல் இழப்பு தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது இழப்பு மற்றும் நட்டம் தொடர்பான சம்பவங்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்காக அறிக்கையிடப்பட்டவில்லை. | நிதிப் பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழ் வருகின்ற மாதிரி படிவத்தின் படி இழப்பு தொடர்பான பதிவேடு நாளதுவரையாக பேணிச்செல்லப்பட வேண்டும். |
| (ஆ) அமைச்சினால் நிதிப் பிரமாணம் 891(i) இன் படி ஊழியர் பிணை வைப்புப் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடொன்று பேணிச்செல்லப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1992 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்திற்குரிய கூட்டுமொத்தமாக 249,843 ஹெக்டேயர் அளவான காணி பிரதேசம் 23 பெருந்தோட்ட கம்பனிகளுக்கு 53 வருட காலத்திற்காக குத்தகை அடிப்படையில் கையளிக்கப்பட்டிருந்தது. நிலுவை வருமானம் தொடர்பான கூற்றின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அந்த கம்பனிகளுக்கு இடையே 11 கம்பனிகளில் இருந்து ரூபா 890,475,674 தொகையான வாடகை வருமானம் நிலுவையாக இருந்ததுடன், 2021 யூன் மாதம் வரையில் அதில் ரூபா 245,242,616 தொகை அறவிடப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்ட போதும், மீதியான ரூபா 645,233,058 தொகை நிதிப் பிரமாணம் 176(2) மற்றும் (3) இன் பிரகாரம் தாமதமின்றி சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகையை விரைவாக தீர்த்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 1992 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்திற்கு சொந்தமான காணிப் பிரதேசம் பெருந்தோட்ட கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கும் போது அக்காணிகளில் இருந்து அறவிட வேண்டிய | ஒட்டுமொத்தமாக சகல பெருந்தோட்ட கம்பனிகளுடன் கையொப்பமிடப்பட்டுள்ள உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளில் | பொருத்தமான பிரகாரம் உடன்படிக்கைகளை திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாடகையை கணிப்பிடுவதற்காக ஈடுபடுத்தப்பட்ட பொறிமுறையின் பிரகாரம் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 200 மில்லியனை விஞ்சி வைக்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறான தேறிய சொத்துக்களின் பெறுமதி அதனைவிட குறைவான ஆகரப்பத்தன, உடுபுஸ்ஸல்லாவ மற்றும் எல்கடுவ என்ற மூன்று பெருந்தோட்ட கம்பனிகளுக்கு 20,757 ஹெட்டேயர் அளவு காணி வாடகை இன்றி வழங்கப்பட்டு 27 வருட காலம் கடந்திருந்தது. தற்போது வரையில் அதில் உடுபுஸ்ஸல்லாவ மற்றும் எல்கடுவ என்ற இரண்டு கம்பனிகளினதும் தேறிய சொத்துக்கள் ரூபா 200 மில்லியனை விஞ்சியிருந்த போதிலும், வாடகையொன்றை அறவிடாதிருந்தமையால் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது செயற்பட வேண்டிய முறை தொடர்பான ஏற்பாடுகள் வாடகை உடன்படிக்கைகளில் காணப்படாமையினால் அந்த அரசாங்கத்தின் காணிகளில் இருந்து வாடகையொன்றை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக இந்த அமைச்சினால் பொதுத் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 1995 ஆம் ஆண்டின் நவம்பர் 27 ஆம் திகதிய குருநாகல் பெருந்தோட்ட கம்பனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இலக்கம் 1558 என்ற குத்தகை வாடகை திருத்த உடன்படிக்கையின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு காணப்பட்ட தேறிய | இது வரை செலுத்தாதுள்ள வாடகைப் பணத்தை புறக்கணிக்காமல் செலுத்துமாறு எங்களுக்கு பிரதியுடன் குருநாகல் பெருந்தோட்ட கம்பனிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இது தொடர்பாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களின் அளவின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட குத்தகைத் தொகை 53 வருடங்களின் போது சமமான நான்கு தவணைகளில் செலுத்தப்பட வேண்டும். எனினும், அவ்வாறு குறித்த குத்தகைப் பணம் செலுத்தாமையினால் 2009 ஆம் ஆண்டு முதல் 2020 திசெம்பர் 31 வரை ரூபா 242,596,454 நிலுவையொன்று காணப்பட்டது. கம்பனியினால் நிருவகிக்கப்படுகின்ற காணிகளின் பொது செயற்பாடுகளுக்காக காணியினை கைப்பற்றியதன் காரணமாக அந்த கம்பனியின் தேறிய சொத்துக்களின் பெறுமதி குறைவடைந்திருந்தமையினால் வருடாந்த வாடகை பணத்தை திருத்துமாறு அக்கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக்கு இணக்கப்பாடு வழங்கப்படாமை இதற்கு ஒரு காரணமாக இருந்தது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. | பொது திறைசேரியின் தலைமையில் குருநாகல் பெருந்தோட்ட கம்பனியுடன் கலந்துரையாடல் ஒன்றை நடாத்துவதற்கு எங்களால் நிதி அமைச்சிற்கு கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | கொட்டகலை பெருந்தோட்ட கம்பனியில் இருந்து 2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 309,111,059 தொகை சிலாபம் மற்றும் மஸ்கெலிய பெருந்தோட்ட கம்பனிகளில் இருந்து 2019 மற்றும் 2020 என்ற 02 வருடங்களில் ரூபா 145,803,191 ஆக வாடகை வருமானம் ஒன்று நிலுவையாக காணப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டின் யூன் மாதம் | பெருந்தோட்ட கம்பனிகளில் எஞ்சியுள்ள வாடகைப் பணத்தை அறவிடுதல் தொடர்பாகவும் அவர்களுக்கு அறிவித்து நிலுவை வாடகையை விரைவாக தீர்த்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிலுவை வாடகையை அறவிடுவதற்காக உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

வரையில் சிலாபம் மற்றும் மஸ்கெலிய பெருந்தோட்ட கம்பனிகளில் இருந்து ரூபா 41,156,706 தொகை அறவிடப்பட்டதாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. எனினும் அந்த 03 பெருந்தோட்ட கம்பனிகளில் இருந்து ரூபா 413,757,544 தொகை மேலும் நிலுவையாக காணப்பட்டதுடன், உடன்படிக்கையின் 5(C) ஆம் பந்தியின் பிரகாரம் உரிய கால எல்லையில் வாடகையை செலுத்தாத தவறுக்கும் வாடகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் 13 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 245 மில்லியன் நிதி ஏற்பாடுகளில் கூட்டுமொத்தமாக ரூபா 25 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் செலவின மதிப்பீட்டை சரியாக தயாரித்தல் தொடர்பாக அமைச்சு கவனம் செலுத்தியிருக்கவில்லை. | COVID 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக பதவியணியினரின் வருகை மட்டுப்படுத்தப்பட்டமையின் காரணமாக செலவினங்கள் குறைவடைந்தமை மற்றும் எதிர்பார்த்த செலவினங்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமை. | ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை சரியான பிரகாரம் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் 08 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 13 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகளில் ரூபா 04 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | COVID - 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக சில பணிகளை பூர்த்திசெய்ய முடியாதிருந்தமை. | ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை சரியான பிரகாரம் பயன்படுத்துதல் வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1985 மே 10 ஆம் திகதிய 289 ஆம் இலக்கம் மற்றும் 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 26/92 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் வாகனத்தில் அரச இலச்சினை பொறிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சிற்குரிய அரச இலச்சினை பொறிக்கப்பட வேண்டிய 27 வாகனங்கள் அரச இலச்சினை பொறிக்கப்படாமல் வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | அரச இலச்சினை பொறிப்பதற்காக அரசாங்கத்தின் தொழிற்சாலைக்கு கூறுவிலை கோரப்பட்டுள்ளது. இது தொடர்பான விடயங்களை விசாரணை செய்தபோது காணப்பட்ட கொவிட் தொற்று நோயினால் இந்த பணிகளில் தாமதம் ஏற்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | உரிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைவைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சில், நிதிப் பிரமாணம் 880(i) இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள தொகுதிகளுக்குரிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை இனங்காணப்பட்டு பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களுக்கு 2021.02.01 ஆம் திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இது வரையில் பிணை வைத்துள்ள உத்தியோகத்தர்கள் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இருப்பார்களாயின் அதனை பாஸ் புத்தக கணக்கு பிரிவிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | |

### 3.2 நட்டம் மற்றும் இழப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் வாகன விபத்துக்கள் ஏற்பட்டு 04 வருடங்களுக்கும் 09 வருடங்களுக்கும் இடையிலான காலம் கடந்திருந்த ரூபா 4.9 மில்லியன் தொகையான 05 வாகன விபத்துக்கள் புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வாகனங்களுக்கான இழப்பீட்டை அறவிட்டு விபத்தினை புத்தகங்களில் இருந்து பதிவழித்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சிலிருந்து வெளி இடங்களுக்கு மாற்றலாகிச் சென்ற 06 உத்தியோகத்தர்களிடம் இருந்து 03 மாதம் முதல் 30 வருடங்களுக்கு இடையிலான காலத்தில் இருந்து அறவிடப்படாது காணப்படுகின்ற ரூபா 358,552 கூட்டுமொத்தமான மீதி தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. இதில் ரூபா 287,850 தொகை 2021 மே மாதம் அளவில் | 20 வருடங்களை விட மேற்கூறப்பட்ட காலத்தில் இருந்து தீர்க்கப்படாமல் காணப்படுகின்ற இந்த கடன் மீதிக்குரிய உத்தியோகத்தர் தொடர்பான தகவல்கள் அவர்கள் இடம் மாற்றலாகிச் சென்ற நிறுவனங்களில் இருந்து விசாரணை செய்த போதிலும், அவர்கள் தொடர்பான தகவல்களை கண்டறிய முடியாதிருந்தது. | முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்க்கப்பட்டுள்ளதுடன், ரூபா 70,752 தொகை மேலும் தீர்க்கப்பட வேண்டியதாக காணப்பட்டது. | | |
| (ஆ) | அமைச்சில் சேவையாற்றும் போது வேலை நீக்கத்திற்கு உட்பட்ட 04 உத்தியோகத்தர்களிடம் இருந்து 06 வருடங்களுக்கும் 23 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் ரூபா 526,278 தொகையான நிலுவை கடன் மீதி தொடர்ந்தும் தீர்த்து வைக்கப்பட வேண்டியதாக காணப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் அதற்காக இணங்கப்படாதிருந்ததுடன், 12 தவணைகளில் செலுத்தி பூர்த்தி செய்யுமாறு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு இணங்க கலந்துரையாடலுக்காக வருவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா தொற்று நோய் நிலைமை முடிவடைந்தவுடன், அது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 592 ஆக இருந்ததுடன், அதில் 157 வெற்றிடங்கள் காணப்பட்டன. இதன் பிரகாரம் பொருத்தமான வகையில் பதவிகளை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020.09.04 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் புதிய பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2020.12.31 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினருக்கு இடையிலான வேறுபாட்டிற்கு இது ஒரு காரணமாகும். | தேவையின் பிரகாரம் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |